### விவசாயத்தை வஞ்சிக்கும் த.வெ.க. அரசைக் கண்டித்து கழகம் நடத்தும்

# ஆகஸ்ட் 3 தஞ்சை ஆர்ப்பாட்டத்தில் அணிதிரள்வோம்!

## கழக விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அழைப்பு!

சென்னை, ஆக 1 -

நீரின்றி தவிக்கும் நிலத்தினை பார்த்து பார்த்து கண்ணீர் வடிக்கும் ஒட்டு மொத்த விவசாயிகளின் குரலாய், டெல்டா மாவட்டத்தின் நலன் கருதி கழகத் தலைவர்திராவிட மடல் அரசின் நாயகர் தளபதி அவர்கள் அறிவித்து இருக்கும், ஆகஸ்ட் 3 அன்று எதிர்க்கட்சி தலைவர் எதிர்கால தமிழ்நாட்டின் நம்பிக்கை உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற இருக்கும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு கழகத்தின் விவசாய அணியின் சார்பில் பெருந்திரளாக பங்கேற்று ஆர்ப்பாட்டத்திற்கு வலு சேர்ப்போம் வாருங்கள் என அழைப்பு விடுத்து மாநில விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

மாநில விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் தமது அறிக்கையில் கூறி இருப்பதாவது .

தமிழ் நாடு உலக அரங்கில் தவிர்க்கமுடியாத மாநிலமாக உருவெடுக்க காரணமாய் இருந்தது முத்தமிழ் அறிஞர் கலைஞர் எனும் நவீன தமிழ் நாட்டின் சிற்பியும், திராவிட மடல் அரசின் பிதாமகர் தளபதி அவர்களும் கொடுத்த அற்புத திட்டங்கள்தான். “உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்” என்கிற பொன்மொழியை மேடைகளில் மட்டுமே பேசிய அரசியல்வாதிகளுக்கு மத்தியில் உழவையும் தொழிலையும் உயிர்ப்போடு இருக்க உன்னதத் திட்ங்களை தந்தது தி.மு.க. ஆட்சிதான் .

அப்படி செழித்துவந்த விவசாயத்தை எந்த அடிப்படையும் இன்றி ,ஆதியும் அந்தமும் தெரியாமல் வெறும் சினிமா மோகத்தால் மட்டுமே போலி வேஷமிட்டு ஆட்சிப்பொறுப்புக்கு வந்திருக்கும் தற்போதைய வேதனை தரும் த.வெ.க. ஆட்சி, விவசாயத்தை பற்றியும் , விவசாய தொழிலாளர்களை பற்றியும் எதுவுமே தெரியாமல் விவசாயிகளை வீதிகளில் போராடவிட்டு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

**கடன் தள்ளுபடியில் ஏமாற்றம்**

ஆட்சிக்கு வந்ததும் விவசாய கடனை தள்ளுபடி செய்வோம் என்று அறிவித்துவிட்டு, அவர்களே எதிர்பார்க்காமல் ஆட்சிப்பொறுப்பிற்கு வந்த த.வெ.க. அரசு , 50 ஆயிரம் ரூபாய் வரை மட்டுமே முழுக் கடன் தள்ளுபடி என்ற வெற்று அறிவிப்பை வெளியிட்டு, அதன் காரணமாக விவசாயிகள் வெகுண்டெழுந்து தற்போது வரை போராட்டம் நடத்திக் கொண்டிருக்கி

றார்கள்.

**மேகதாது விவகாரத்தில் அரசின் மெத்தனம்**

தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதில் இருந்தே மேகதாது அணை கட்டுவதில் கர்நாடக அரசு தீவிரம் காட்டி வருகிறது. அதற்காக கர்நாடக அரசு ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களை கர்நாடக முதலமைச்சர் நேரில் சந்தித்து மேகதாது திட்டத்துக்கு ஒப்புதல் வழங்க வலியுறுத்தியும் , டெல்லியில் கர்நாடகத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சி எம்.பி.க்களுடன் கூட்டம் நடத்தி, மேகதாது அணை கட்டக் கடைமடை மாநிலங்களின் அனுமதி தேவையில்லை என நாடாளுமன்றத்தில் ஒன்றிய ஜல்சக்தி துறை தெரிவித்த பதிலை மேற்கோள் காட்டியும் பேசவைத்துள்ளது.

அதேபோல கர்நாடக அமைச்சர் ராமலிங்க ரெட்டி, கர்நாடக அரசின் டெல்லி பிரதிநிதி, கர்நாடக அரசின் தலைமை வழக்கறிஞர் மற்றும் மூத்த அதிகாரிகளுடன் மேகதாது அணை தொடர்பான ஆய்வுக் கூட்டத்தை நடத்தி, ஊடகங்களிடம் தொடர்ந்து மேகதாது அணையைக் கட்டியே தீருவோம் எனவும், தமிழ்நாடு அரசின் அனுமதி தேவையில்லை எனவும் பேசி வருகிறார்.

ஆனால் இதற்கு மாறாக, இவ்விவகாரத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பிரதமருக்குக் கடிதம் எழுதியதோடு தனது கடமை முடிந்து விட்டது என மவுனம் காத்து , தனது திரைப்ப டத்தின் வசூலை பெருக்க மார்க்கெட்டிங்க் செய்துவருகிறார். இதற்கிடையில், தமிழ்நாடு முதலமைச்சர் கர்நாடகம் சென்று பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் எனக்கூறி, இப்போது தமிழ்நாடு சார்பில் சில விவகாரங்கள் தொடர்பாகத் தமிழ்நாடு முதல மைச்சர் பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளதாக, கர்நாடக முதல மைச்சரே தெரிவித்துள்ளார்.

மேலும் இதுதொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் கர்நாடக செல்வதாகவும் செய்திகள் வெளியாகி இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில், காவிரியில் நமக்கு உரிய பங்கினை வழங்க காவிரி ஒழுங்காற்றுக் குழு உத்தரவிட்டும், அதனை நிறைவேற்ற முடியாது என்று கர்நாடக மாநில முதலமைச்சர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து, தமிழ்நாடு முதலமைச்சர் இன்னும் வாய் திறக்காமல் இருக்கிறார்.

அதுமட்டுமல்ல, மேகதாது விவகாரம் தொடர்பாக ஒரு தீர்ப்பாயம் அமைக்க வேண்டும் என்று சட்டமன்றத்தின் மூலம் வலியுறுத்தி இருக்கின்ற நிலையில், இந்த கர்நாடக பயணம் இதனை நீர்த்துபோகச் செய்யாதா? என்ற கேள்வியும் எழுகிறது. இப்படி இந்த த.வெ.க. அரசைப் பொறுத்தவரையில் எந்தத் தகவல்களிலும் தெளிவு இல்லை, எதிலும் வெளிப்படைத்தன்மை இல்லை. எதற்கெடுத்தாலும் குழப்பம், எல்லாவற்றிலும் ஏமாற்றம். இதுவே இந்த அரசின் வழக்கமாக மாறியிருக்கிறது.

தனது திரைப்படம் கர்நாடகாவில் வெளியாவதில் சிக்கல் ஏற்படக் கூடாது என்பதற்காகவே முதலமைச்சர் இதுகுறித்து வெளிப்படையாகப் பேசாமல் அமைதி காக்கும் செயல் விவசாய மக்களுக்கு எதிரானது.

**அனைத்துக் கட்சிக் கூட்டம்**

தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சியின் பிதாமகர் தளபதி அவர்கள் , உடனடியாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தோடு, விவசாயச் சங்கப் பிரதிநிதிகளின் கூட்டத்தையும் கூட்டச் சொல்லி பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக ஆலோசனைகளை வழங்கியதோடு, முதலமைச்சருக்கு ஆதரவு அளிக்கும் கட்சிகள் உட்பட தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு கட்சிகளும், விவசாயச் சங்கங்களும் அரசுக்குக் கோரிக்கை விடுத்தும் அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அமைதி காத்து வருகிறார் இந்த முதலமைச்சர்.

கடந்த ஆண்டு 6.5 லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி நடந்து சாதனை படைத்த நிலையில், இந்த ஆண்டு மேட்டூர் அணை திறக்கப்படாததால் 1.5 லட்சம் ஏக்கர் சாகுபடி மட்டுமே நடப்பதாகச் செய்திகள் வருகிறது. இதனால் 2,500 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்பட்டு 14 இலட்சம் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுத் தவிக்கிறார்கள். எனவே அவர்களுக்கு என்ன செய்யபோகிறது இந்த அரசு என்பது மிகப்பெரிய கேள்விக்குறி.

சினிமா மோகத்தில் ஆட்சிக்கு வந்திருக்கும் இந்த அரசு விவசாயிகளின் வேதனையை புரிந்து கொண்டு செய்யலாற்றிட தவறி இருக்கிறது. எனவே விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்குக் குறுவை நிவாரணமாக 25 ஆயிரம் ரூபாய் வழங்கிடவும் . காப்பீட்டுத் திட்டத்துக்கான பிரீமியம் தொகையை அரசே செலுத்தி முழுக் காப்பீடு கிடைக்க உதவிடவும், சம்பா சாகுபடிக்கான மறு முதலீடாக விதை, உரம், பூச்சிக்கொல்லி என இடுபொருட்கள் மானியமாக வழங்கிடவும் இந்த அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்படி, விவசாயப் பெருமக்களின் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும், காவிரி உரிமையை நிலைநாட்டுவதில் த.வெ.க. அரசின் மெத்தனப்போக்கைக் கண்டித்தும் வரும் 03.08.2026 அன்று காலை 10.00 மணியளவில், தஞ்சாவூர், பனகல் கட்டடம் அருகில், கழக இளைஞரணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

விவசாயத்திற்கு ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும் இல்லை என்றாலும் எப்போதும் பாதுகாப்பாக இருக்கும் திமுக நடத்தும் இந்த ஆர்ப்பாட்டத்தில், விவசாயிகளும் விவசாய தொழிலாளர்களும் பெருந்திரளாகக் கலந்துகொண்டு விவசாயிகளுக்காகக் குரல் கொடுதது கழகத்தின் கரத்தை வலுப்படுத்த வேண்டும்.

மேலும், அனைத்து விவசாயச் சங்கங்களைச் சேர்ந்த தோழர்களும், இவ்விவகாரத்தில் ஒருமித்த கருத்துடைய அனைத்து அரசியல் கட்சிகளின் தோழர்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு விவசாயிகளுக்காக குரல் கொடுக்கும் நம் திராவிட மாடல் அரசின் பிதாமகர் தளபதி அவர்களின் விவசாய கோரிக்கைகளை விரைவில் வென்றெடுக்க துணை நிற்க வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் என்பது, விவசாயிகளின் குரலைக் கேட்காமல் ரீல்ஸ் மோகத்தில் இருக்கும் த.வெ.க. அரசின் கவனத்தை ஈர்க்கும் முதல் கட்ட நடவடிக்கைதான் என்பதையும் , அரசின் இந்த மெத்தனப்போக்குத் தொடர்ந்தால், நம் இயக்கத்தின் தலைவர் திராவிட மாடல் நாயகர் தளபதி அவர்கள் முன்னெடுக்கும் மிகப்பெரிய போராட்டங்களை நாம் நடத்த வேண்டியிருக்கும் என்பதையும் இந்த அரசுக்கு எச்சரிக்கையாகத் தெரிவித்துக் கொள்வோம். இவ்வாறு கழக விவசாய அணிச்செயலாளர் ஏ. கே. எஸ்.விஜயன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### சென்னை தெற்கில் முத்தமிழறிஞரின் நினைவுநாளில்

# கழக முன்னணி பேச்சாளர்கள் பங்கேற்று உரையாற்றும் மாபெரும் புகழ்வணக்கப் பொதுக்கூட்டங்கள் !

## மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை, ஆக.1

சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் நேற்று (31.07.2026) வெள்ளிக்கிழமை காலை சென்னை தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் எஸ். குணசேகரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சென்னைத் தெற்கு மாவட்ட கழக செயலாளர் - மேனாள் மருத்துவத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்துகொண்டு ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார். அவர் தமதுரையில் மூன்றுத் தீர்மானங்களை முன்மொழிந்து உரையாற்றினார். அவை வருமாறு:

தீர்மானம் 1

பதின்மூன்று வயதில் பண்பாட்டு தமிழர்களுக்கு தம்மை எடுத்தளித்த ஏந்தல், பதினான்கு வயதில் பகுத்தறிவுக்கொடியேந்தி மொழிப்போர் களத்தில் குதித்து முத்துவேலர் பெற்றெடுத்த செல்வர், ஈராயிரம் ஆண்டுகால தமிழர்களின் இழிவைத் துடைக்க வந்த இனமான அரிமா, ஈரோட்டுச் சூரியனின் கோபநெருப்பைதம் எழுது கோலில் வாங்கி, இனமானப் போருக்கு வித்திட்ட இயற்றமிழ் வள்ளல், மானமும், அறிவும் திராவிட மண்ணின் சொத்து என முழங்கிய மகத்தான பெருந்தலைவர் மாண்புடை தென்னாட்டின் மகத்தான திராவிட புரட்சியாளர் தயாளு அன்னை பெற்றெடுத்த தனித்தமிழ் சிகரம், ஐந்து முறை நாடாண்ட அறிவாசான், அன்னைத் தமிழ்நாட்டின் முகவரியாய் விளங்குகிற ஆற்றொழுக்கின் இலக்கணம், திராவிட இயல் நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை இந்த மண்ணிற்கு எடுத்தளித்த தியாகசீலர் முத்தமிழறிஞர் கலைஞர் பெருந்தகையின் 9ஆம் ஆண்டு நினைவுநாளில் தலைமைக் கழகம் முன்னெடுக்கிற அமைதிப்பேரணி, புகழ் வணக்கப் பொதுக்கூட்ட நிகழ்வுகளில் சென்னைத் தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட சைதாப்பேட்டை, வேளச்சேரி, விருகம்பாக்கம், சோழிங்நல்லூர், மதுரவாயல் உள்ளிட்ட ஐந்து சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள கழக நிர்வாகிகள், தோழர்கள், தொண்டர்கள் பெருமளவில் பங்கேற்றுச் சிறப்பிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம் 2

முத்தமிழறிஞர் கலைஞரின் 9ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சிகள் சென்னை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட சைதாப்பேட்டை, வேளச்சேரி, விருகம்பாக்கம், சோழிங்நல்லூர், மதுரவாயல் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள ஆயிரம் இடங்களில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆயிரம் திருவுருவுப்படங்களை திறந்து வைத்து, மலர்தூவி நினைவேந்தல் நிகழ்வை முன்னெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம் 3

சென்னைத் தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஐந்து சட்டமன்றத் தொகுதிகளிலும் சைதாப்பேட்டை, வேளச்சேரி, விருகம்பாக்கம், சோழிங்நல்லூர், மதுரவாயல் ஆகிய ஐந்து சட்டமன்றத் தொகுதிகளிலும் முத்தமிழறிஞரின் 9ஆம் ஆண்டு நினைவேந்தல் புகழ் வணக்க பொதுக்கூட்டங்களை கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரல்படி நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

7-8-2026 அன்று சைதை கிழக்குப் பகுதியில் உள்ள அன்னை வேளாங்கண்ணிக் கலைக்கல்லூரி வளாகத்தில் வட்டக் கழக செயலாளர் - மாமன்ற உறுப்பினர் தா.மோகன்குமார் தலைமையில் கவிச்சுடர் கவிதைப்பித்தன் பங்கேற்கும் கவிஞர்கள் நெல்லை லெஜயந்தா, வி.ம.இளங்கோவன், ஆண்டாள் பிரிதர்சினி, இளையகம்பன், வல்லம் தாஜ்பால் ஆகியோர் கவிபாடும் கவியரங்க நிகழ்ச்சியும், 982026 அன்று வேளச்சேரி சட்டமன்றத் தொகுதியில் உள்ள தரமணி பேருந்து நிறுத்தம் அருகில் வட்டச் செயலாளர் த.பார்த்திபன் தலைமையில் செ.ம.மதிவதனி பங்கேற்கும் புகழ்வணக்கப் பொதுக்கூட்டமும், 11 .8.2026 அன்று விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள எம்.ஜி.ஆர். நகர் மார்க்கெட் அருகில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா தலைமையில் பேரா. சுப.வீரபாண்டியன் மற்றும் கோ.வி.செழியன் பங்கேற்கும் புகழ்வணக்கப் பொதுக்கூட்டமும்,

13.8.2026 அன்று மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில் உள்ள காரம்பாக்கத்தில் பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் கணபதி தலைமையில் திண்டுக்கல் ஐ.லியோனி, ஆர். எஸ்.பாரதி பங்கேற்கும் புகழ்வணக்கப் பொதுக்கூட்டமும், நிறைவாக 17 .8.2026 அன்று சோழிங்நல்லூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள பெருங்குடி சர்ச் ரோடு அருகில் பகுதி கழக செயலாளர் பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன் தலைமையில் மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி சிவா மற்றும் போடி காமராஜ் ஆகியோர் பங்கேற்கும் நினைவுநாள் புகழ்வணக்கப் பொதுக்கூட்டங்களை நடத்தி, கலைஞரின் புகழுக்கோர் வீரவணக்கம் செலுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

மேற்கண்ட தீர்மானங்களை சென்னைத் தெற்கு மாவட்ட நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் நிர்வாகிகள் அனைவரும் எழுந்துநின்று கைத்தட்டி வரவேற்றனர். இக்கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, வர்த்தக அணி செயலாளர் கவிஞர் காசி. முத்துமாணிக்கம், தலைமைச்செயற்குழு உறுப்பினர் பாலவாக்கம் க.சோமு, மாவட்டக் கழக நிர்வாகிகள் பாலவாக்கம் த.விஸ்வநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், வாகுசி பாண்டியன், பகுதி கழக செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், பெருங்குடி எஸ்.வி. ரவிச்சந்திரன், எம்.விநாயகமூர்த்தி, நொளம்பூர் வே.ராஜன், ஒன்றிய கழக செயலாளர்கள் கோவிலம்பாக்கம் கோ.வெங்கடேசன், அயப்பாக்கம் வீரமணி, பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், மின்னல் கந்தப்பன், களக்காடி எல்லப்பன், எம்.கே.ஏழுமலை, எஸ்.ஏ.அரிகிருஷ்ணன், மாநில அணிகளின் நிர்வாகிகள் ரத்னா லோகேஷ்வரன், நிவேதா ஜெசிகா, இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஆர்.கிருஷ்ணகுமார், கோட்டூர் பிரகாஷ், சந்திரேஷ், தியாகராஜன், அசோக்குமார், ஸ்ரீகாந்த், ராமாபுரம் ரவி மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் பா.அருண்குமார், கழக த.ரமேஷ், கொட்டிவாக்கம் பார்த்திபன், வழக்கறிஞர் எம்.ஜெகதீசன், அடையார் சி.சுரேஷ், சி. சசிக்குமார், மு.முகேஷ்கண்ணன், நிஷா சையத், உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

### தமிழ்நாட்டில் நிலத்தடி நீர் மேலாண்மை –

# பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு?

## மக்களவையில் – தே.மலையரசன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 1 –

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் மக்களவையில் எழுப்பிய கேள்வி வருமாறு:–

தமிழ்நாட்டில், குறிப்பாக கள்ளக் குறிச்சி மக்களவைத் தொகுதியில், அடல் புஜல் யோஜனா (ABY) திட்டத்தைச் செயல்படுத்துவதன் தற்போதைய நிலை என்ன? இத்திட்டத்தின் கீழ் அடங்கும் மாவட்டங்கள், வட்டாரங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

தமிழ்நாட்டில் கடந்த ஐந்து ஆண்டுகளில் நிலத்தடி நீர் மேலாண்மை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதிகள் குறித்த விவரங்கள் என்ன?

அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம், நீர் சேமிப்பு நடைமுறைகள் மற்றும் சமூகப் பங்கேற்பு ஆகியவற்றின் மீது ABYயின் தாக்கத்தை அரசு மதிப்பீடு செய்துள்ளதா, அவ்வாறாயின் அதன் விவரங்கள் என்ன?

தமிழ்நாட்டில் அவசர நடவடிக்கை தேவைப்படும் வகையிலான, அளவுக்கு அதிகமாகச் சுரண்டப்பட்ட மற்றும் மிக மோசமான நிலையில் உள்ள நிலத்தடி நீர் மண்டலங்களை ஒன்றிய அரசு அடையாளம் கண்டுள்ளதா, அவ்வாறாயின் அது குறித்த விவரங்கள் என்ன?

தமிழ்நாட்டின் நீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளில் நிலத்தடி நீர் செறிவூட்டல், மழைநீர் சேகரிப்பு, நீரைத் திறம்படப் பயன்படுத்துதல் மற்றும் நிலையான நிலத்தடி நீர்

மேலாண்மை ஆகியவற்றை ஊக்குவிக்க ஒன்றிய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன? என்று மக்களவையில் தே.மலையரசன் கேள்வி எழுப்பினார்.

### காவிரி உரிமைக்காக ஆக.3ல் – தி.மு.க. நடத்தும் ஆர்ப்பாட்டத்தில்

# மனிதநேய ஜனநாயக கட்சி பங்கேற்கும்!

## ம.ஜ.க. தலைவர் மு.தமிமுன் அன்சாரி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, ஆக. 1 –

மனித நேய ஜனநாயக கட்சித் தலைவர் மு.தமிமுன் அன்சாரி எம்.எல்.ஏ. விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு

காவிரியின் குறுக்கே அணை கட்ட முயற்சிக் கும் கர்நாடக அரசின் நடவடிக்கைகளை கண்டித்தும், காவிரி உரிமைகளை பாதுகாக்கும் நோக்கோடும், விவ

சாயிகளுடைய நலனை முன்னிறு த்தியும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எதிர்வரும் ஆகஸ்ட் 3 அன்று தஞ்சாவூரில் ஆர்ப்பாட்டம் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஒத்த கருத்துடைய கட்சிகள் இதில் பங்கேற்க வேண்டும் என்று வேண்டுகோளும் விடுக்கப்பட்டு இருக்கிறது.

தமிழ்நாட்டு மக்களின் நியாயமான உணர்வுகளை பிரதிபலிக்கும் நோக்கோடு நடைபெறவிருக்கும் இந்த ஆர்ப்பாட்டத்தில், மனிதநேய ஜனநாயக கட்சி பங்கேற்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# மதுரவாயல் தெற்குப் பகுதி கழகக் கூட்டம்!

## பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி அறிக்கை!

சென்னை, ஆக.1

மதுரவாயல் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி கழகக் கூட்டம் இன்று 01.08.2026 சனிக்கிழமை மாலை 5.00 மணியளவில் காரம்பாக்கம், சமயபுரம் பிரதான சாலையில் அமைந்துள்ள JVP மினி ஹாலில் பகுதி கழக அவைத் தலைவர் P.M.செல்வராஜ் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு மதுரவாயல் தெற்குப் பகுதிக்குட்பட்ட தலைமை செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர். வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், இளைஞரணி மாவட்ட துணை அமைப்பாளர்கள். மாமன்ற உறுப்பினர்கள் . தகவல் தொழில் நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள். அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோது 07.08.2026 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8-ஆம் ஆண்டு புகழஞ்சலி நிகழ்ச்சி மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படவிருக்கிறது.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் டாக்டர்.எம்.வீரப்பன் அவர்களிடம், தாம்பரம் மாநகர செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா டி.டி.கே. நகரில் மழைநீர் கால்வாய் அமைப்பது குறித்து கலந்துரையாடினார். உடன் 4வது மண்டல குழு தலைவரும் பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளருமான டி.காமராஜ், 53வது வார்டு மாமன்ற உறுப்பினர் டி.ஆர்.கோபி, எஸ்.ஜி.கருணகாரன், இரா.ரத்தினகுமார் மற்றும் குடியிருப்போர் நலசங்க நிர்வாகிகள் உள்ளனர்.